NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 8 February 2026

# வயது, புகைபிடித்தல், மரபணு மாற்றங்களால் வயிற்றுப் புற்றுநோய் அபாயம் அதிகரிக்கலாம்

வயது, புகைபிடித்தல், வாய்வழி உடலுக்குள் செல்லும் நுண்ணுயிர் மற்றும் மரபணு மாற்றங்கள் வயிற்றுப் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடியது என்பது அனைவரும் அறிந்த ஒன்று.

இருப்பினும், ஒருவருக்கு அவை அனைத்தும் ஒன்றாக ஏற்படும்போது, ஆபத்து அதிகரிக்கிறது என்று அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வு கண்டறிந்துள்ளது. டியூக்-என்யுஎஸ் மருத்துவப் பள்ளி மற்றும் தேசியப் பல்கலைக்கழகச் சுகாதாரக் கட்டமைப்பு விஞ்ஞானிகள், அனைத்துலக ஆய்வாளர்கள் குழுவுடன் இணைந்து மேற்கொண்ட இந்தக் கண்டுபிடிப்பு, புற்றுநோய்க்கு முந்தைய வயிற்று உட்படலத்தில் ஏற்படும் ஆரம்பகால உயிரியல் மாற்றங்களைப் பற்றிய ஒரு பார்வையை வழங்குகிறது மற்றும் அதிக ஆபத்தில் உள்ளவர்களை மருத்துவர்கள் அடையாளம் காண அனுமதிக்கிறது.

“இது, புற்றுநோய் ஏற்படுவதற்கு முன்பு சரியான தலையீடுகளுடன், சரியான நேரத்தில், சரியான நபர்களைக் கண்டுபிடிப்பது பற்றியது,” என்று தேசிய பல்கலைக்கழக சுகாதாரக் கட்டமைப்பின் தலைமை நிர்வாகியும் ஆய்வின் இணை மூத்த ஆசிரியருமான பேராசிரியர் யோ கே குவான் தெரிவித்தார்.

இவரும் டியூக்-என்யுஎஸ் மருத்துவப் பள்ளித் தலைவரான பேராசிரியர் பேட்ரிக் டானும் இணைந்து ஆய்வை நடத்தி அறிக்கையை வெளியிட்டுள்ளனர். நாட்பட்ட இரைப்பை அழற்சி அல்லது நெஞ்செரிச்சல் நோயாளிகளுக்கு வயிற்றின் சீதமென்சவ்வில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இத்தகையோருக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகளை ‘கேன்சர் டிஸ்கவரி இதழில் வெளியான ஆய்வு சுட்டியது.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.